Previous Date of examination : 03.11.2020

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ.சா. 66 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | வயது | 52 /2022 |
| தகப்பனார் பெயர் | நவநீதகிருஷ்ணன் | ஜாதி | |
| தொழில் | ஸ்டுடியோ | மதம் | |
| ஊர் | மன்னார்குடி | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

(1) நான் தற்போது மன்னார்குடியில் வசித்து வந்து ஸ்டூடியோ வைத்துள்ளேன். நான் 2008-ம் வருடம் முதல் 2022 ம் வருடம் செம்படம்பர் மாதம் வரை சாந்தி தியேட்டர் எதிரில் சன்ரைஸ் என்ற பெயரில் ஸ்டூடியோ நடத்தி வந்தேன். ஆஜர் எதிரிகள் சக்திவேல், கோவிந்தலெட்சுமி ஆகியோரை தெரியும். சாட்சி சுரேஷ்சை வழக்கு சம்பவத்திற்கு பின்னர்தான் தெரியும். என்ன சம்பவம் என்றால் கோவிந்தலெட்சுமி மண்ணெண்ணெய்யை ஊற்றி கொண்ட நிகழ்வு நடந்த பின்னர் தெரியும். கூத்தாநல்லூரில் ராஜா ஸ்டுடியோ நடத்தி வரும் ராஜமகேந்திரன் என்பவர் மூலம் எனக்கு 1வது எதிரி சக்திவேலை தெரியும். கோர்ட்டில் வேலை உள்ளது, ஒரு வேலை வாங்க இரண்டு லட்சம் ஆகும், உங்களது சான்றிதழ்களையும், அட்வான்ஸ் பணத்தையும் கொடுத்தால் 2018 ஜனவரி 30 க்குள் வேலை வாங்கி விடலாம். குடும்ப நல நீதிமன்றம் வருகிறது என்று சொல்லி ஜனவரி 20 ம் தேதிவாக்கில் 1வது எதிரி சக்திவேல் சொன்னார். எனக்கு வேண்டிய நபர்களான சங்கீதா, அப்பாஸ், சிவரஞ்சனி, முத்துபாண்டி ஆகியோரை அழைத்துக்கொண்டு திருவாரூரில் உள்ள துர்க்காலாயா ரோட்டில் உள்ள 1வது எதிரியின் வீட்டில் வைத்து தலா ரூ.1 லட்சம் வீதம் அட்வான்ஸ் தொகை கொடுத்தோம்.

(2) 1வது எதிரியின் வீட்டில் அவரது அம்மா, அப்பா, மனைவி ஆகியோர்கள் இருந்தார்கள். என்னுடன் ராஜமகேந்திரனும் வந்திருந்தார். 1வது எதிரி உயர்அதிகாரிகள் இருப்பதாகவும்,அவர்கள் மூலம் வேலை வாங்கி தருவதாகவும் சொன்னார். வேலை வாங்கி தரும் விபரம் அறிந்து எனக்கு தெரிந்த முகில், கார்த்திகா, ஜஸ்வர்யா, ராதிகா, வீரராஜன், ராகினி, வெங்கடேஷ், ஜாய்மார்டீன், சாந்தினிமேடோனா, உமாமகேஸ்வரி, அய்யப்பன் ஆகியோர் 1வது

எதிரி சக்திவேலிடம் நேரில் வந்து பணம் கொடுத்தார்கள். பணத்துடன் அவர்களது கல்வி சான்றிதழ்களையும் கொடுத்தார்கள். பணம் கொடுத்தபோது 10, 15 நாட்களில் வேலை வந்து விடும் என்று சொன்னார். அவ்வாறு நடக்கவில்லை. அதன் பிறகு வாரம், வாரம் வந்து கேட்டோம். வந்துவிடும் என சொல்லி காலம் கடத்தினார். அவ்வாறு ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டது. அதன் பிறகு நாங்கள் வந்து கேட்டதால் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமிதான் பணம் கொடுத்தார் அவரிடமே கேட்டுக்கொள்ளுங்கள் என்று 1 வது எதிரி சொன்னார்.

(3) நாங்கள் உங்களிடம்தானே பணம் கொடுத்தோம் என்று கேட்டோம். அப்போது கோவிந்த லெட்சுமி சக்திவேல் வீட்டிற்கு வந்தார். கோவிந்தலெட்சுமி 1 வது எதிரியின் வீட்டில் குடியிருப்பதாக சொன்னார். மேலும் வேலை சம்பந்தமாக மேடம் சென்னை போயுள்ளார்கள். வேலை கிடைத்துவிடும் என்று எதிரி கோவிந்தலெட்சுமி எங்களுக்கு உறுதியளித்தார். அதன் பிறகு ஒருவாரம் கழித்து மீண்டும் சக்திவேல் வீட்டிற்கு போனோம். அப்போது கோவிந்தலெட்சுமியை அழைத்து வருகிறேன் என்று சொல்லி சக்திவேல் சென்று கோவிந்தலெட்சுமியை அழைத்து வந்தார். சக்திவேல் சொல்லச்சொன்னதால் நான் சொன்னேன் என எங்களிடம் சொல்லிவிட்டு கோவிந்தலெட்சுமி கோர்ட்டிற்கு வந்தார்.

(4) அவர் பின்னாலேயே 1 வது எதிரி சக்திவேலும் வந்தார், நாங்களும் அவர்களுடன் கோர்ட்டிற்கு வந்தோம். கோர்ட் வாயிலுக்கு வெளியில் நின்றுக்கொண்டிருந்தோம. அப்போது சுரேஷ் என்பவர் வந்து மண்ணெண்ணெய்யை கோவிந்தலெட்சுமி ஊற்றிக்கொண்டதாக சொன்னார். அப்போது என்னுடன் வந்த ராதிகா,அர்ஜுன், ஐஸ்வர்யா மாமனார், கார்த்திகா அப்பா பாலகிருஷ்ணன் ஆகியோரும் இருந்தார்கள். மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கெண்டதாக சொன்னதால் நாங்கள் அப்படியே வீட்டிற்கு போய்விட்டோம். மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்ட நிகழ்வு 2019 மார்ச் மாதத்தில் நடந்தது. அதற்கு முன்பே பணத்திற்கு உத்தரவாதம் தருவதாக 15 பேருக்கு 1 வது எதிரி சக்திவேல் 16.03.2019 ம் தேதியில் பத்திரம் எழுதி கொடுத்தார்.

(5) அதில் வேலை வாங்கி தருவதாக சொல்லி தலா ரூ.1 லட்சம் பெற்றுக்கொண்டதாகவும்,அந்த பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாகவும் எழுதி கொடுத்தார். அந்த பத்திரங்கள் என்னிடம்தான் உள்ளது. அதன் பிறகு 1 வது எதிரி கைது செய்யப்பட்ட பின்னர்தான் எங்களை போல் 83 நபர்கள் ஏமாந்த விபரம் தெரியவந்தது. என்னால் 1 வது எதிரி எழுதி கொடுத்த ஆவணங்களை தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும்.

**( அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )**

ஒம்/-எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.